**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**
**OS.60/2017 . நாள்.05.02.2025**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சரவணன் | **வயது** | |
| **த/பெ. க/பெ.** | கோவிந்தப்பன் | **மதம்** | |
| **முகவரி** | வேலம்பட்டி | **தொழில்** | |

**<u>வா.சா.1 ஆஜர். 2, 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். 12.06.1972 ஆம் தேதி நான் பிறந்தேன். எனக்கு தற்போது 54 வயதாகிறது. இந்த வழக்கில் நான் 2–ம் வாதி ஆவேன். இந்த வழக்கில் நான் எனக்காக சாட்சியம் அளிக்கிறேன். அ–அட்டவணை சொத்துக்கள் சின்னபிள்ளை கவுண்டருக்கும், செல்லியம்மாளுக்கும் சுயமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். தாவா அட்டவணை சொத்தில் என்னென்ன சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 885/12 ஆகும். வேறு எந்த சர்வே எண்ணிலும் சொத்து வாங்கவில்லை. சர்வே எண் 885–ல் எவ்வளவு விஸ்தீரணம் நிலம் உள்ளது என்று சொன்னால் 1/2 ஏக்கருக்கும் குறைவாக உள்ளது. மேற்படி 1/2 ஏக்கரின் ஜக்குபந்தி தெரியாது.

2. ஆ–அட்டவணை சொத்து குறித்தும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சர்வே எண் எனக்கு தெரியாது. அதில் விஸ்தீரணம் என்றும் தெரியாது. சொத்து விவரமும் தெரியாது. வழக்கு சொத்துகளான அ மற்றும் ஆ அட்டவணை சொத்துக்களுக்கு ஜக்குபந்தி விவரங்கள் குறிப்பிடவில்லை. அ மற்றும் ஆ அட்டவணை சொத்துக்களுக்கு வழிகாட்டி மதிப்பீடும் தாக்கல் செய்யவில்லை. தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்து மதிப்பீடு தவறானது என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா சின்னபைய கவுண்டர் மற்றும் செல்லியம்மாளுக்கு பெரியக்கா, ரத்தினவேல், கோவிந்தப்பன், சின்னக்கா, கரத்தையம்மாள், பூலோகா, பச்சியப்பன், பாண்டியன் , பரமசிவன் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். 9 வாரிசுகள் ஆவார்கள். பெரியக்காவிற்க்கு சுமார் 74 வருடங்களுக்கு முன்பு திருமணம் ஆனது என்று

சொன்னால் சரிதான்.

3. கருத்தம்மாள் என்பவருக்கு 67 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைப்பெற்றது என்றால் சரிதான். சின்னக்காளுக்கு 72 வருடங்களுக்கு முன்பு திருமண் நடைப்பெற்றது என்றால் சரிதான். பூலோகத்திற்க்கு 57 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைப்பெற்றது என்றால் சரிதான். பெரியக்காள், கருத்தம்மாள், சின்னக்காள், பூலோகம் ஆகியோரின் திருமணத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. நான் மேற்படி திருமணத்தை பார்க்கவில்லை என்பதால் அவர்களுக்கு பொன்னும், பொருளும் சீர்வரிசையும் கொடுத்ததாக சொல்வது பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் ரத்தினவேல், கோவிந்தப்பன் ஆகியோர் தாவா சொத்துக்களை இந்து கூட்டு குடும்பமாக நிர்மாணித்து அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான்.

4. எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை இந்து கூட்டு குடும்பமாக அனுபவம் செய்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனது தாத்தா சின்னபைய கவுண்டர் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். செல்லியம்மாள் சுமார் 27 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அவர்களின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. வழக்குரையில் 3–ம் பக்கத்தில் 7–வரியில் சுமார் 35 வருடங்களுக்கு முன்பு வாய்மொழியாக மேற்படி ரத்தினவேல், கோவிந்தப்பன் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு ஒப்படைத்துவிட்டனர் என்று கூறியுள்ளது தவறானதாகும். நான் போட்டுள்ள வழக்கு தவறானது கிடையாது. அ–அட்டவணை சொத்தில் ரத்தினவேல், கோவிந்தப்பன் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் எந்த இடத்தில் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் வீடானது அவர்அவர்களுக்கு கொடுத்த இடத்தில் உள்ளேயும், வெளியேயும் கட்டப்பட்டுள்ளது.

5. மேற்படி வீடுகளை சொத்து விவரத்தில் சொல்லியுள்ளேன். எதுவும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.எந்த சர்வே எண்ணில் வீடு கட்டியுள்ளார்கள் என்று என்னால் சொல்ல இயலாது. அ–அட்டவணை சொத்து விவசாயம் செய்வதற்க்காக பிரித்து கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக உள்ளது. விவசாயம் செய்யும் இடத்தில் சர்வே எண் தெரியாது. எவ்வளவு விஸ்தீரணத்தில் விவசாயம் செய்து வருகிறார்கள் என்று தெரியாது. ரத்தினவேல் 24

வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். சின்னதாய் சுமார் 23 ஆண்டுகளுக்கு முன்பே இறந்துவிட்டார். ஆறுமுகம் எனது பெரியப்பா மகன் ஆவார். அவரும் இறந்துவிட்டார். அவருக்கு மல்லிகா என்ற மனைவியும், லோகேஸ்வரி என்ற பெண்ணும் உள்ளார். அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை.

6. கோவிந்தப்பன் 31.08.2003 ஆம் தேதி இறந்துவிட்டார். கோவிந்தப்பனுக்கு இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். ரத்தினவேல், சின்னதாய், மற்றும் ஆறுமுகம் ஆகியோரின் இறப்பு சான்று தாக்கல் செய்யவில்லை. இறந்துபோன நபர்களுக்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. சின்னபையன், செல்லியம்மாள், தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை 11.07.1984 ஆம் ஆண்டு தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை கிரையம் பெற்றார்கள் என்று சொன்னால் சரிதான். அதேப்போல் 15.06.1947–லும் கிரையம் பெற்றுள்ளார்கள். அதேப்போல் 16.06.1947, 16.07.1949, 08.06.1953, 09.07.1951 ஆகிய தேதிகளில் தாவா சொத்துக்களை தாத்தா, பாட்டி கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான்.

7. மேற்படி சொத்துக்களை ரத்தினவேல், கோவிந்தப்பன், 1 முதல் 3 பிரதிவாதிகள் 1982 ஆம் ஆண்டு வரை கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். பொதுகுடும்ப சொத்தை பொருத்து ரத்தினவேல், கோவிந்தப்பன், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு இடையில் பிரச்சனை ஏற்ப்பட்டது. அன்றைய தேதியிலேயே பெரியோர்கள் முன்னிலையில் பேசி அவர் அவர்களுக்கு வாய்மொழியாக பாகம் ஏற்ப்படுத்தி அவர் அவர் சொத்துக்களை அவர் அவர்களே அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதன் அடிப்படையில் 1984 ஆம் வருடம்

நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அவர்அவர்கள் அனுபவித்த சொத்தை பொருத்து அவர்களுக்கு பட்டா ஏற்ப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதில் எனக்கும் தனிப்பட்டா ஏற்ப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN

Distirct Munsif cum Judicial Magaistrate
Digitally signed by SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.